தகவல் ஏடு

# ‘My Health Record’(என் சுகாதாரப் பதிவு)

## ‘My Health Record’ என்றால் என்ன?

‘My Health Record’ என்பது உங்களுடைய முக்கியமான உடல்நலத் தகவல்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கான ஒரு இடமாகும். உங்களுடைய பதிவு உங்களுக்கும், உங்களுடைய சுகாதார சேவை வழங்குநர்களுக்கும், உங்களுடைய பிரதிநிதிகளுக்கும் எவ்வேளையிலும் கிடைக்கும். அவசர நிலை ஒன்று இதில் உள்ளடங்கும்.

## ‘My Health Record’- ஐ நான் ஏன் பயன்படுத்த வேண்டும்?

- உங்களுடைய சுகாதாரத் தகவல்களை நீங்கள் ஒரே இடத்தில் அணுகலாம்.
- காலப் போக்கில் உங்களுடைய உடல்நலத்தைப் பற்றிய விரிவானதொரு கண்ணோட்டத்தை இதனால் கொடுக்க இயலுமாகலாம்.
- உங்களுடைய மருத்துவ வரலாற்றினை மீண்டும் சொல்ல வேண்டிய தேவை உங்களுக்கு இல்லாமல் இருக்கலாம்.
- அவசியமற்ற சோதனைகள் மற்றும் ‘ஸ்கேன்’களைத் தவிர்க்க இது உதவக்கூடும்.
- இன்னும் நல்ல சுகாதாரப் பராமரிப்பு அனுபவங்களும், பலன்களும் உங்களுக்குக் கிடைக்க இது உதவலாம்.
- அவசர நிலை ஒன்றில் உங்களைப் பற்றிய தகவல்களைப் பெறலாம்.
- உங்களுடைய பதிவு எப்பொழுதும் உங்களுடைய கட்டுப்பாட்டில் இருக்கும்.

## ‘My Health Record’-இல் என்ன இருக்கும்?

உங்களுடைய சுகாதாரப் பராமரிப்பு சேவை வழங்குநர்களிடமிருந்து வந்த மருத்துவ ஆவணங்கள் உங்களுடைய பதிவில் இருக்கும். சோதனை முடிவுகள், மருந்துகள் மற்றும் ஒவ்வாமை குறித்த தகவல்கள் மற்றும் தடுப்பூசியேற்றப் பதிவுகள் ஆகியன இதில் உள்ளடங்கலாம். நீங்கள் விரும்பினால், உங்களுடைய ‘மெடிகெயர்' ஆவணங்களும் இதில் சேர்க்கப்படலாம். உங்களுடைய சொந்த உடல்நலனைப் பற்றிய குறிப்புகளையும் நீங்கள் சேர்க்கலாம்.

## ‘My Health Record’-ஐ நான் எவ்வாறு அணுகலாம்.

கணினி அல்லது கைப்பேசி சாதனம் ஒன்றைப் பாவித்து ‘My Health Record’ -ஐ நீங்கள் அணுகலாம். முதலில், ‘myGov’ கணக்கு ஒன்று உங்களுக்குத் தேவைப்படும். ‘My Health Record ‘-ஐ அணுகுவதற்கு ‘myGov’ ஒரு பாதுகாப்பானதொரு வழியாகும் அடுத்ததாக, ‘My Health Record’-ஐ, நீங்கள் உங்களுடைய உங்களுடைய ‘மை-கவ்' (‘myGov’) -உடன் இணைக்க வேண்டியிருக்கும். உங்களுடைய பதிவை நீங்கள் ஒரு முறை ஏற்படுத்திக்கொண்ட பிறகு ‘**1800MEDICARE** செயலி' யைப் பயன்படுத்தி கணினி அல்லது மொபைல் சாதனம் ஒன்றில் உங்களுடைய ‘My Health Record’-ஐ நீங்கள் பார்வையிடலாம்.

## என்னுடைய பதிவேட்டை யாரால் அணுக இயலும்?

பெரும்பான்மையான தருணங்களில், சுகாதார சேவைகளை வழங்குவதற்காக **சுகாதார சேவை வழங்குநர்கள்** உங்களுடைய பதிவினை அணுகிப் பெற அனுமதிக்கப்படுவர். இருப்பினும், நீங்கள் விரும்பினால், சுகாதார சேவை வழங்குநர்களுக்கு உள்ள உங்களுடைய பதிவினை அணுகிப் பெறும் வசதியை நீங்கள் கட்டுப்படுத்தலாம்.

உங்களுடைய நம்பிக்கைக்கு உரிய ஒருவரை நீங்கள் உங்களுடைய ‘**நியமிக்கப்பட்ட பிரதிநிதி**’ **(nominated representative)யாக** செயல்படுமாறு கேட்கலாம். குடும்ப அங்கத்தவர், நெருங்கிய நண்பர் அல்லது பராமரிப்பாளர் ஒருவராக இவர் இருக்கலாம். உங்களது நியமிக்கப்பட்ட பிரதிநிதியால் உங்களுடைய பதிவினைப் பார்வையிட இயலும். அதை நிர்வகிக்கவும் அவரால் உங்களுக்கு உதவ இயலும். உங்களுடைய நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு இருக்கும் அணுகல் வசதியின் அளவை நீங்கள் நிர்ணயம் செய்யலாம், மற்றும் அதை எவ்வேளையிலும் புதுப்பிக்கலாம்.

‘**அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதிநிதி**’ (**authorised representative**) ஒருவருக்கு அவரைச் சார்ந்திருப்போரது ‘My Health Record’ -ஐ முற்றிலும் அணுகிப் பெறுவதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான வசதி இருக்கும். மற்றோரைச் சார்ந்திருக்கும் நபர் என்பவர்:

- 14 ஆண்டுகளுக்குக் கீழ்ப்பட்ட வயதுடையவர், அல்லது
- தமக்கான முடிவுகளைத் தாமே மேற்கொள்ள இயலாமல் இருக்கும் 14 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதுடைய ஒருவர்.

## ‘My Health Record’-இல் உள்ள அந்தரங்கப் பாதுகாப்பு மற்றும் அணுகல் அம்சங்கள் யாவை?

‘My Health Record’ உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பாதுகாப்பான மற்றும் பத்திரமானதொரு முறைமையாகும். உங்களைப் பற்றிய முக்கியமான தகவல்களை நீங்கள் நிர்வகித்து வரலாம், அவற்றை யாரெல்லாம் அணுகிப் பெறலாம் என்பதைக் கட்டுப்படுத்தலாம், மற்றும் எந்தத் தகவல்கள் அணுகிப் பெறப்பட்டுள்ளன என்று பார்க்கலாம். அதன் சில இயக்கச்-செயல்களில் உள்ளடங்குவன:

- ‘மட்டுப்படுத்தப்பட்ட ஆவண அணுகல் குறியீடு’ (Limited Document Access Code (LDAC)) ஒன்றைக் கொண்டு குறிப்பிட்ட ஆவணங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துதல்.
- ‘பதிவு அணுகல் குறியீடு’ (Record Access Code (RAC)) ஒன்றைக் கொண்டு உங்களுடைய முழுப் பதிவுகளுக்கான அணுகலையும் கட்டுப்படுத்துதல்.
- எவ்வொரு வேளையிலும் ஆவணங்களை நீக்குதல்.
- புதிய ஒரு அமைப்பினால் முதல் முறையாக உங்களுடைய பதிவு அணுகப்படும் பொழுது எச்சரிக்கை-அறிவிப்பு ஒன்றைப் பெறல்.

## இதில் நிறுவப்பட்டுள்ள மற்ற பாதுகாப்பு ஏற்பாடுகள் யாவை?

- வலுவான சங்கேதக்-குறியீடுகள், தீச்சுவர்கள், பாதுகாப்பான உள்-நுழைவுச் செயல்முறைகள் மற்றும் தணிக்கை உள்-நுழைவு ஆகியவற்றை உள்ளடக்கிய பாதுகாப்பு ஏற்பாடுகள்.
- எமது முகமை இந்த முறைமையைக் கண்காணித்துவரும்.
- வேண்டுமென்றே செய்யப்படும் துஷ்பிரயோகத்திற்குக் கணிசமான அபராதங்கள் செல்லுபடியாகும்.
- அனைத்துத் தரவுகளும் ஆஸ்திரேலியாவில் பத்திரமாக இருப்பில் வைக்கப்பட்டிருக்கும்.
- வெளிப்புற மென்பொருள் ஒன்றுடன் தொடர்பு அனுமதிக்கப்படுவதற்கு முன்பாக, இணக்க செயல்பாட்டு முறை ஒன்றின் ஊடாக அந்த மென்பொருள் கடந்தாகவேண்டும்.
- சட்டக் கட்டமைப்பு ஒன்றினால் இது பாதுகாக்கப்படுகிறது.

## ‘My Health Record’ -ஐ ஏற்படுத்திக்கொள்ள ‘மெடிகெயர்’ அட்டை ஒன்று எனக்குத் தேவைப்படுமா?

‘மெடிகெயர்’ அல்லது ‘முன்னாள் இராணுவ-வீரர்கள் விவகாரத் திணைக்கள’(Department of Veteran's Affairs (DVA))த்தின் ஆதாயங்களுக்கு நீங்கள் தகுதி பெறாதவர் என்றாலும் கூட ‘My Health Record’ வசதியை உங்களால் பெற இயலும்.

# 'மெடிகெயர்' அல்லது 'முன்னாள் இராணுவ-வீரர்கள் விவகாரத் திணைக்கள'(DVA)த்தின் ஆதாயங்கள் இல்லாமலேயே 'My Health Record' ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதில் உள்ள படிநிலைகள் யாவை?

'மெடிகெயர்' அல்லது 'முன்னாள் இராணுவ-வீரர்கள் விவகாரத் திணைக்கள'(DVA)த்தின் ஆதாயங்கள் இல்லாமலேயே 'My Health Record' ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதில் உள்ள படிநிலைகளின் சாராம்சம் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

1. உங்களுடைய 'மை-கவ்' ('myGov') கணக்கின் ஊடாக 'தனிநபர் சுகாதாரப் பராமரிப்பு அடையாளக் குறியீடு' (individual healthcare identifier (IHI)) ஒன்றிற்காக விண்ணப்பியுங்கள்.
2. 'My Health Record' (PDF, 550.71 KB) எனும் படிவத்தினை உங்களுடைய IHI -யுடன் சமர்ப்பித்தும், சான்றுபடுத்தப்பட்ட 100 புள்ளி அடையாள ஆவணங்களைக் கொடுத்தும் 'My Health Record' -இற்காக பதிவு செய்யுங்கள்.
3. 'மை-கவ்' ('myGov')-இல் 'My Health Record' -ஐ இணைத்துக்கொள்ளுங்கள்

விலாவரியான கூடுதல் தகவல்களுக்கு 'ஆஸ்திரேலிய டிஜிடல் சுகாதார முகமை' (Australian Digital Health Agency)-யின் 'மெடிகெயர்' அல்லது DVA ஆதாயங்கள் இல்லாமலேயே பதிவு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுங்கள்' ('Set up a record without Medicare or DVA benefits') எனும் வலைப்பக்கத்திற்குச் செல்லுங்கள்.

## கூடுதல் மூலவளங்கள்

'My Health Record' வலைப்பக்கம்
Web: www.digitalhealth.gov.au/my-health-record

'My Health Record' இணையவழிக் கல்வி
Web: https://training.digitalhealth.gov.au/mod/page/view.php?id=960

'My Health Record' உதவித் தொலைபேசி இணைப்பு
தொலைபேசி 1800 723 471 (தெரிவு 1), நாளுக்கு 24 மணி நேரமும் வாரம் 7 நாட்களும் கிடைக்கும்.

'ஆஸ்திரேலிய டிஜிட்டல் ஹெல்த் ஏஜென்சி' தொடர்புப் படிவம்
Web: www.digitalhealth.gov.au/contact-us

'மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைப்பு சேவை
தொலைபேசி 131 450
Web: www.tisnational.gov.au/Help-using-TIS-National-services/Contact-TIS-National

'நேஷனல் ரிலே சர்வீஸ்'
தொலைபேசி 1300 555 727
Web: www.accesshub.gov.au